# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 19 புதன்கிழமை 04.09.2024 கதிர் 352



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel



# ரணிலுக்கு ஆதரவான கட்சிகளின் கூட்டணி நாளை அங்குரார்ப்பணம்

- எம்.பி.க்கள் அனைவருக்கும் அழைப்பு
- பரப்புரைகளை தீவிரப்படுத்தவும் திட்டம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்துள்ள கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து பிரமாண்ட கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுவந்த நிலையில், இதன் அங்குரார்ப்பண நிகழ்வை நாளை வியாழக்கிழமை பிரமாண்டமான முறையில் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

கொழும்பு பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஹேஜ் ஹொட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற உள்ளதுடன், நாளை காலை ரணிலை ஆதரிக்கும் அனைத்து எம்.பிகளும் இந்த நிகழ்வில் பங்குபற்றி உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு ரணில் விக்ரமசிங்கவின் தரப்பால் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. 7



## கடவுச் சீட்டு வழங்குவதில் பிரச்சினை அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும்

### மாதாந்தம் 1.1 பில்லியன் அரசுக்கு நட்டம் என்கிறார் சஜித்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கடவுச் சீட்டுப் பிரச்சினையால் மாதத்துக்கு 1.1 பில்லியன் ரூபா நாட்டுக்கு நட்டம் ஏற்படுகின்றது. எனவே இந்த சிக்கலுக்கு விரைவான தீர்வு பெற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் கடவுச்சீட்டுப் பிரச்சினை தொடர்பாக பிரஸ்தாபித்தார். அவர் தனது உரையில்,

"கடவுச்சீட்டு வழங்குவதில் காணப்படுகின்ற பிரச்சினை பாரிய சிக்கலாக மாறியிருக்கின்றது. 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரை 83,000 கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. 2024 ஆம் ஆண்டு மாதம் ஒன்றுக்கு 60,000 கடவுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது விநியோகிக்கப்படுகின்ற சாதாரண கடவுச்சீட்டுக்கு பதிலாக எலக்ட்ரானிக் கடவுச்சீட்டு வழங்க மேற்கொண்ட முயற்சியின் செயற்பாடு தோல்வியில் முடிவடைந்து இருக்கிறது.

இந்த முறையை அறிமுகப்படுத்தும் வரை மக்களுக்கு சாதாரண கடவுச்சீட்டை வழங்க வேண்டும். அதனை சாதாரணமாகவும் தொடர்ந்தும் வழங்க முடியாத நிலை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு இலக்ட்ரோனிக் கடவுச் சீட்டுக்களை அறிமுகப்படுத்தும் வரை அரசாங்கம் கடவுச் சீட்டு விண்ணபபங்களுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்க வேண்டும். இதுவரை நாளொன்றுக்கு 2000 கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்க வேண்டி இருந்த போதும், இப்போது 900 கடவுச்சீட்டுக்களே விநியோகிக்கப்படுகின்றது. இதனால் நீண்ட வரிசை ஏற்பட்டு பாரிய சிக்கல் நிலையை தோற்றுவித்திருக்கின்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திடம் காணப்படுகின்ற கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை 30 000 வரை குறைந்திருக்கின்றது. ஈ-கடவுச்சீட்டு விநியோகத்தில் கொள்வனவு நடைமுறை எதனையும் பின்பற்றவில்லை. தகுதி இல்லாத நிறுவனங்களுக்கு அவற்றை வழங்கி இருப்பதனால், இந்த செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதுள்ளது. இதற்காக சாதாரண விலை மனுக் குரல் இடம் பெற்றிருக்க வேண்டும்.

அதையும் முறையாகச் செய்யவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர 7

## புதிய ஜனாதிபதிக்கு ஒரு பாடமாகவே பொது வேட்பாளர் அமைய வேண்டும்

### மன்னாரில் அரியநேத்திரன் தெரிவிப்பு

சிதறிக்கிடக்கும் தமிழ் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் களம் இறக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகின்றவருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண்டும் என தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் ரெலோ அலுவலகத்தில் இன்று நண்பகல் இடம்பெற்ற மக்கள்



சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 7

## நாடாளுமன்றத்தில் இன்று முதல் சுயேச்சையாக செயற்படுவேன்

### அருந்திக பெர்னாண்டோ அறிவிப்பு

நாடாளுமன்றத்தில் சுயேட்சையாகச்செயற்படப்போவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ, நாடாளுமன்றத்தில் இன்று விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்ல சதி செய்து மக்களை மூளைச்சலவை செய்யும் புனிதமற்ற கூட்டணியை தோற்கடிக்க சுயேச்சை எம்.பி என்ற வகையில் அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொதுநலவாய கண்காணிப்புக்குழு 15 ஆம் திகதி இலங்கை வருகிறது

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக சிஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி ஃபோர் தலைமையிலான 13 பேர் அடங்கிய பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது. 2

# துர்க்காதேவி மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 12 தினங்களைக் கொண்ட வருடாந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 14ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## கையூட்டு வாங்குவதற்கு முற்பட்ட இரு பொலிஸார் இடைநிறுத்தம்

பொதுமகனிடம் கையூட்டு வாங்க முற்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் விவேகானந்தா நகர் பகுதியைச் சேர்ந்த நபர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் இவ்வாறு இருவரையும் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.

குறித்த பொதுமகனிடமிருந்து 5000 ஷரூபா பணம் பெற இருவரும் முயற்சித்துள்ளனர். இது தொடர்பாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், குறித்த இருவரையும் நேற்று முதல் பணியிலிருந்து இடைநிறுத்துமாறும் பொலிஸ் அத்தியட்சகர் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இருவரும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 113

## பொதுநலவாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுப்பதற்காக வழமைபோன்று இம்முறையும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகள் ஆகியவற்றுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது.

அதற்கமைய ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் இரண்டு குழுக்கள் கடந்த இரு வாரங்களில் நாட்டை வந்தடைந்ததுடன், அவை நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்புப்பணிகளை ஆரம்பித்துள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழுவொன்றும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் செயன்முறையைக் கண்காணிப்பதற்காக நாட்டுக்கு வருகைதரவுள்ளது.

## மதுபான கோட்டா பெற்றுக்கொண்டோரின் விபரங்கள் சஜித் ஆட்சியில் வெளியிடப்படும்

### மன்னாரில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்



மதுபான “லைசன்ஸ்களுக்காக” ரணிலை ஆதரித்தோர், இரகசியமாக மதுபான “கோட்டாக்களை” பெற்றுக் கொண்டோரின் விபரங்கள், எதிர்வரும் சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் பகிரங்கப்படுத்தப்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாரில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

கோட்டாபய ராஜபக்ஷவின் இனவாத ஆட்சியால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்தது. சிங்களப் பெரும்பான்மை வாக்குகளாலேயே, ஆட்சிக்கு வந்ததாக மமதையுடன் நடந்துகொண்டார் கோட்டா. மதங்களைப் புண்படுத்துமளவுக்கு அவரது மனநிலை இறுமாப்படைந்தது. கொரோனாவில் மரணித்த முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களை நல்லடக்கம் செய்யவிடாமல் தீயில் எரித்தார். இந்த அராஜகத்துக்கு உடந்தையாக இருந்த அமைச்சர்கள், எம்.பி.க்களே இன்று ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். நாங்கள் செய்தவற்றை நிறுத்துவதற்கென்றே, இங்கு ஒரு இராஜாங்க அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்டுக்கரைக்குளம், வியாயடிக்குளம், நெடுங்கண்டல் குளம் மற்றும் அஹத்திக்குளம் போன்ற விவசாயக் குளங்களைப் புனரமைத்து, இருபோக நெற் செய்கைக்கு வாய்ப்புக்களை வழங்கவுள்ளோம்.

இங்கே வெள்ளமாகத் திரண்டுள்ள மக்கள் பணத்துக்காகவோ, சாப்பாட்டுப் பார்சல்களுக்காவோ சேர்த்த கூட்டமல்ல. சஜித் பிரேமதாசவை வெல்லவைக்கும் ஒரே வேட்கையோடு சேர்ந்த கூட்டம். சஜித்தின் வெற்றிக்காக அமோக ஆதரவளித்த பெருமையில் முதலிடம் பிடிக்க, மன்னார் மாவட்ட மக்கள் முந்திக்கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு பாலம் அமைத்து வர்த்தகத்தை விரிவுபடுத்தவும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் சஜித் பிரேமதாசவை வெற்றிபெறச் செய்வோம்” என்றார்.

## மாதகலில் படகு விபத்து ஒருவரை காணவில்லை

மாதகலில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற இளைஞர்கள் பயணித்த படகு நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இந்நிலையில் ஒருவர் பாதுகாப்பாக கரை சேர்ந்துள்ளதுடன் மற்றையவர் காணாமல் போயுள்ளார்.

இன்று புதன்கிழமை அதிகாலை இரண்டு இளைஞர்கள் கடற்றொழிலுக்கு சென்றுள்ளனர். அவர்கள் பயணித்த படகு திடீரென விபத்துக்குள்ளானது. இந்நிலையில் படகில் பயணித்த ஒருவர் நீந்திக்கொண்டிருந்த வேளை அருகே வந்த படகின் உதவியுடன் காப்பாற்றப்பட்டுள்ளார். மற்றைய இளைஞர் காணாமல் போயுள்ளார்.

நாகராசா பகீரதன் என்ற 21 வயது இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளார். அவரை தேடும் நடவடிக்கைகளில் கடற்படையினரும் மீனவர்களும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# பிரித்தானிய எம்.பி. உமாகுமரனுடன் லண்டனில் சிறீதரன் எம்.பி சந்திப்பு

பிரித்தானியாவின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழத் தமிழ்வம்சாவழியைச்சேர்ந்தவருமான உமா குமரனுக்கும், யாழ். கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு, பிரித்தானிய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றுள்ளது.

தமிழ்மக்களின் மீது இலங்கை அரசால் கட்டமைக்கப்பட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலை, அதற்கான நீதிப் பொறிமுறை, ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சமகால இன ஒடுக்குமுறைகள், மக்களின் அடுத்தகட்ட எதிர்பார்ப்புகள் நோக்கிய அரசியல் முன்னகர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பில், பிரித்தானிய தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் பிரதிநிதி சென் கந்தையா மற்றும் பிரித்தானியாவின் சிரேஷ்ட சட்டத்தரணிகளுள் ஒருவரான கணா கணநாதன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

# அம்பாறை தேர்தல் நடவடிக்கைக்கு ஹக்கீமினால் விசேட குழு நியமனம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அம்பாறை மாவட்டத்தில் சகல செயற்பாடுகளையும்முன்னெடுக்க ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீமினால் விசேட குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டடுள்ளது.

இக்குழுவின்தலைவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டுள்ளதுடன் உறுப்பினர்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய பொருளாளரும், முன்னாள் கல்முனை மாநகர பிரதி மேயருமான றஃமத் மன்சூர், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும் முன்னாள் கல்முனை மாநகர மேயருமான சிறாஸ் மீராசாகிப், அரசியல் மற்றும் சமைய விவகார இணைப்பாளர் எம்.ரீ. சப்றாஸ், உச்சபீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளருமான ஏ.சீ. சமால்டீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சகல செயற்பாடுகளையும் முன்னெடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இக்குழுவுக்கு அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சகல உச்சபீட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் பிரதி தலைவர்கள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், பிரமுகர்கள் மற்றும் போராளிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார்.






# மிதி வெடி

விசியம் கேள்விப்பட்டிருப்பியள் எண்டு நினைக்கிறன்…?

லஞ்ச, லாவண்ணியங்களுக்குப் பேர் போன பிரதேச சபை ஒண்டில வேலை பாக்கிற ரெண்டு பேரக் கையுங்களவுமாப் பிடிச்சிருக்கினமாம்… உள்ளூராட்சி சபைகளில கொஞ்சம் பெரிய அதிகார எல்லையுள்ள சபைகள் எல்லாம் நல்ல வருமானம் தரக்கூடிய சபைகள் தான். ஆனாப் பாருங்கோ அதில உள்ள அடிமட்ட ஆக்கள் முதல் அதிகாரிகள் வரை வாங்கிற சம்பளத்துக்கு மேலால "கிம்பளம்" வாங்கிக் கொண்டிருக்கிறதால தான் சபைகளுக்குப் பெரிசா வருமானம் வாறதில்லை.

கரைச்சியில இப்ப மாட்டுப்பட்டுப் போய் நிக்கிறது வருமான வரி வாங்கிறவையாம். இப்பிடித்தான் இங்கால யாழ்ப்பாணத்தில உள்ள பெரியநகர சபையில இருந்த "உயிரான" வருமான வரி உத்தியோகத்தர் ஒருத்தர் கடுமையா உழைச்சுத் தள்ளினவர். ஆணையிடுறவரைக் கைக்குள்ள (கையில குடுத்துக் ) போட்டுக் கொண்டு, பினாமி வேலை பார்த்தவர். இந்த முறை நல்லூர்த் திருவழா மட்டும் தான் பினாமியளுக்கு வருமானம் குடுக்காமல் நேரடியாச் சபைக்குப் போனதெண்டு சொல்ல வேணும்….

துண்டு துண்டா அங்கயும் இங்கயுமா கை நனைக்கிறதால தான் கனபேர் மாட்டுப்படுகினம் பாருங்கோ….. சூரிய மின்சாரத்துக்கு "கிளியரன்ஸ்" குடுக்கிறவை மாதிரி வருசத்தில ஒரு "பல்க்" லஞ்சம் வாங்கினால் பிடிபடாமல் ஓடலாமாம். அவை சொல்லுறதும் சரிதானே பாருங்கோ…. கண்டவனிட்டையும் கை நீட்டிக் காசு வாங்கேக்க எவன் எப்ப மாட்டி விடுவான் எண்டு தெரியாமல் முழிக்க வேண்டி இருக்கும். ஒருத்தன், ரெண்டு பேரிட்டை மட்டும் வாங்கினால் வெளியில தெரிஞ்சால் அவை தான் எண்டு "ஈஸி"யாகக் கண்டு பிடிச்சுடலாம். போட்டுக் குடுத்தது தாங்கள் தான் எண்டு தெரியவந்துடும் எண்டுறதால குடுத்தவையும் வெளியில சொல்ல மாட்டினம். அது சரி தானே? அஞ்சும், பத்துமா கனபேரிட்டை வாங்கிப் போட்டு முழிக்கிறத விட, அள்ளு கொள்ளையா லட்சக்கணக்கில ஒரே "ஷொட்ல" வாங்கினாப் பாதுகாப்பு எண்டு நினைக்கினம்.

இப்பிடித்தான்… கட்டாத வீட்டுக்கு "கிளியரன்ஸ்" குடுத்து மாட்டுப் பட்டுப் போய் நிக்கினமாம்… யாழ்ப்பாணத்தில "சோலர் கிளியரன்ஸ்" குடுக்க பின்கதவு "டீலிங்" நடக்குது எண்டு ஆரம்பத்தில இருந்து முறைப்பாடுகள் கிடைச்சாலும், மேலதிகாரிகளுக்கும் பங்கிருக்கிறதாலயோ என்னவோ அவையும் கண்டு கொள்ளுறில்லையாம். முந்தி முறைப்பாடுகள் கிடைக்கக் கிடைக்க மூடி வச்சுப் போட்டு இருந்திடுவினாமாம்… இப்ப அப்பிடிச் செய்யேலாமல் கிடக்குதாம்… முறைப்பாடு இப்ப மின்சார சபையைத் தாண்டி வெளியில எல்லே போகுது?

கொஞ்ச நாளைக்கு முன்னம் ஒருத்தர் தனக்கு "கிளியரன்ஸ்" தாறதில மோசடி நடந்ததெண்டு ஜனாதிபதியிட்ட முறையிட்டவராம்… அது மேலதிகாரிகளுக்குள்ளால இங்க வர, எல்லாம் குடுத்துட்டம் எண்டு எல்லா "சனலு"கும் பதில் அனுப்பிப் போட்டு… "எங்க அவர் ஒரு கிளியரன்ஸ்" ஆவது எடுத்துப்பாக்கட்டும் எண்டு இருந்தவையாம்… அந்த விசியம் இப்ப மறுபடியும் ஜனாதிபதிவரைக்கும் போயிருக்குதாம்… இதுக்குள்ள யாழ்ப்பாணத்தின்ர பெரிய பிரதேச சபைகளில ஒண்டுக்குத் தவிசாளரா இருந்த ஒருத்தரின்ர கட்டாத வீட்டுக்குக் காசு வேண்டிக் கொண்டு "கிளியரன்ஸ்" குடுத்த விசியம் ஆதாரத்தோட ஜனாதிபதி செயலகத்துக்குக் கிடைச்சிருக்காம்….

தவிசாளர் கட்டிக் கொண்டிருக்கிற வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் போன வரியம் நவம்பர் மாதம் தங்கட வீட்டுக்கு "சோலர்" போடுறதுக்காக விண்ணபபிச்சிருக்கிறார். அவர் அவ்வளவுக்குச் செல்வாக்கில்லாத ஒருத்தர். என்ன அவற்ற உறவுக்காரர் ஒருத்தர் மாகாண சபையின்ர முன்னாள் உறுப்பினர். நவம்பர் மாதம் விண்ணப்பிச்சவருக்கு இந்த வரியம் ஓகஸ்ட் மாதம் வரை "கிளியரன்ஸ்" கிடைக்கேல்ல… ஏனெண்டு அறிஞ்சு பாத்தா… இந்த வரியம் ஏப்ரல் மாதம் விண்ணப்பிச்ச தவிசாளரிட்டை கையேந்திக் காசு வாங்கின படியா அவருக்குக் "கிளியரன்ஸ்" குடுக்க வேணும் எண்டதுக்காக இவருக்கு "கிளியரன்ஸ்" குடுபடேல்ல… அவசர, அவசரமா வாங்கின காசுக்காக தவிசாளர் வீட்டைக் கட்டி முடிச்சாரோ இல்லையோ "கிளியரன்ஸ்" குடுபட்டுட்டுது…. அதுக்குப் பிறகு நவம்பர் மாசம் விண்ணப்பிச்சு, காசு கட்டினவர் போய்க் கேட்டிருக்கிறார்… "உங்கட ஃபீடர்ல லிமிட் முடிஞ்சு போச்சு" உங்களுக்கு "கிளியரன்ஸ்" வேணுமெண்டா பதினொரு லட்சம் தாங்கோ "கிளியரன்ஸ்" தாறம் எண்டிருக்கினம்.

அது எப்பிடி? போன வரியம் நவம்பர் மாசம் விண்ணப்பிச்சு, "கிளியரன்ஸ்" க்கான கட்டணமும் கட்டினவருக்கு "ஃபீடரில" இல்லாத இடம், இந்த வரியம் "ஏப்ரல்" மாசம் விண்ணப்பிச்ச தவிசாளருக்கு வந்தது…? ஓடிப் பாத்தால்… ஒரு "மில்லியன்" விளையாடி இருக்குதாம்… இப்ப எல்லாம் சேர்த்து ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கு…. ஆர் முதல் "கிளியரன்ஸ்" க்காக கட்டணம் கட்டினவை, எவைக்கு எந்த ஒழுங்கில "கிளியரன்ஸ்" குடுபட்டது எண்டது சம்பந்தமா இந்தப் பெடி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழயும் கேள்வி கேட்டிருக்கிறாராம்… அதுக்கும் பதில் இல்ல…. முறைப்பாடு இப்ப தகவல் அறியும் ஆணைக்குழு வரைக்கும் போயிட்டுதாம்……

சுன்னாகத்தில ஒரு "மிகத் திறமையான" புடவைக்கடைக்காரனை வெட்டிப் போட்டு, மற்ற ஆளுக்குக் "கிளியரன்ஸ்" குடுத்த நேரத்திலயும் பிரச்சினை கிளம்பினதாம்… ஆனா காதும், காதும் வைச்சமாதிரி அந்தக் கதைய அமத்திப் போட்டினமாம்…. அப்ப தவிசாளரிண்ட கட்டாத வீட்டுக்குக் கனெக்சன் குடுத்தது "கமுக்கமா" மாட்டுப்பட்டுப் போச்சுதாம்…..

உதுக்குள்ள இன்னொரு புதினத்தையும் சொல்லிப்போட்டுப் போறன்…… உதே தவிசாளரின்ர "ஏரியா"வுக்குள்ள முன்னுக்கிருக்கிற ஒரு வீட்டுக் காணிக்குள்ளால பின்னுக்கிருக்கிற வீட்டுக்கு "ஸேவிஸ் வயர்" இழுத்திருந்வையாம்… இப்ப பின்னுக்கிருக்கிறவைக்கு "சோலர்" குடுக்கேக்க அவையின்ர ஒழுங்கேக்குள்ளால தனி "லைன்" குடுத்திட்டினமாம்… இதைப் பார்த்துட்டு முன்னுக்கிருக்கிற வீட்டுக்காரர்… பின்னுக்கிருக்கிறவையின்ர "ஸேவிஸ் வயர்"ஐயும் ஒழுங்கேக்குள்ளால கொண்டு போங்கோ…. எங்கட வளவுக்குள்ள அடுத்தவயின்ர "கனெக்ஸன்" வேண்டாம் எண்டு போய்க் கேட்டவவாம்…. "அப்பிடி செய்யுறதெண்டா இதுக்கான செலவை நீங்கள் தான் தர வேணும்" எண்டு சொல்லுறாராம் அதிகாரி ஒருத்தர்… "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே!" என்று சொன்ன புலவருக்கு காசு எண்டு வரேக்க கண் கடை தெரியுதில்லைப் பாருங்கோ…..

உதைத் தான் சொல்லுறது பாருங்கோ…"மெனோபோலி" எண்டு… வேற வழியில்லாததால தங்கட காலில விழ வைச்சு, காசு பாக்கினம்…. என்னத்தை சொல்ல?

நாரமுனி

மாலைக்கதிர்
Maalaikkathir



# அநுர மீது கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு இலங்கை சீர்திருத்த அமைப்பு சட்ட நடவடிக்கை

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் அதற்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழு சரியாக செயற்படத் தவறியமை தொடர்பில் இலங்கை சீர்திருத்த அமைப்பின் சட்டப் பிரதிநிதி தனுக ரணஞ்சக கஹந்தகமகே ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விசேட முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ள அவர், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட போதிலும் தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சியானது தேர்தல் சட்டங்களை மீறுவதாக பல சந்தர்ப்பங்களில் அவதானித்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

இவ்வாண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி மஹரகம இளைஞர் நிலையத்தில் நடைபெற்ற அரசியல் கூட்டத்திற்கு அரச தாதியர்களை சீருடையில் அழைத்து வந்தமை தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விடுத்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தொடர்பான முறைப்பாடு தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த தேர்தல் சட்டங்கள் மற்றும் அரசியல் நெறிமுறைகளை மீறுவது குறித்து தேர்தல் ஆணைக்குழுவால் எந்த முக்கிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்றும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.



## “சிதறடிக்க அல்ல சிறகடிக்க” மலையக ஜனாதிபதி வேட்பாளரின் கொள்கைப் பிரகடனம் வெளியீடு




மலையக அரசியல் அரங்கமாகிய நாங்கள் வெல்வதற்காக் அல்ல சொல்வதற்காக களம் காண்பவர்கள். இந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது உரிமைக் கோரிக்கைகளை தேசிய கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் வெற்றி பெறுவார்கள் என கருதப்படும் பிரதான வேட்பாளர்களின் கவனத்தைப்பெறும்வகையிலும்எமது உரிமைக்கோரிக்கைகளை முன்வைத்து வருகிறோம்.

அந்த வகையில், எதிர்வரும் 7 ஆம் திகதி எமது கொள்கைப் பத்திரம் மடகொம்பரை தோட்டத்தில் லயன் அறையில் அமையப் பெற்றுள்ள ஜனாதிபதி வேட்பாளர் காரியாலத்தில் தொழிலாளர் தோழர்களுக்கு கையளிக்கப்படுவதன் மூலம் பொது வெளிக்குக் கொண்டு வரப்படும் என அறிவிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து எதிர் வரும் செப் 9 ஆம் திகதி ஆ12ஆ ஒழுங்கு செய்யும் ஏனைய வேட்பாளர்கள் உடன் இடம்பெறும் விவாத மேடையில் கலந்து கொண்டு அவர்களிடையே எமது கொள்கை அறிக்கை பகிரப்பட்டு விவாதிககவும், எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 3 மணிக்கு அரச ஊடக மையத்தில் இருந்து நேரலையாக சகல ஊடகங்களின் ஊடாக நாட்டு மக்கள் அனைவருக்குமாக மூன்று மொழிகளிலும் எழுத்து வடிவத்திலும் உரையாகவும் எமது கொள்கை அறிக்கை வழங்கப்படும்.

மூன்று மொழிகளிலும் ஊடகவியலாளர் எழுப்பும் கேள்விகளுக்கு பதில் வழங்கத் தயார் என்று மலையக அரசியல் அரங்கம் அறிவித்துள்ளது.

## தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக அவுஸ்திரேலியாவிலிருந்து நிதி உதவி

தமிழர்கள் சார்பில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக நிதி பங்களிப்பு ஒன்று அவுஸ்திரேலியாவிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. சிட்னியிலிருந்து இயங்கும் இருபத்துநான்கு மணிநேர சமூக வானொலியான தாயகம் தமிழ் ஒலிபரப்பு தனிப்பட்ட தமிழ்பேசும் அவுஸ்திரேலியர்கள் வழங்கிய பங்களிப்புகளை ஒன்று திரட்டி பத்து இலட்சம் ஷரூபாய்களை தமிழ்த் தேசியக் பொதுக் கட்டமைப்பிடம் கையளித்திருக்கிறது.

இந்தப் பங்களிப்பு குறித்துக் கருத்துத் தெரிவித்த தாயகம் வானொலியின் நிர்வாக இயக்குனர் விஜய் இராஜகோபால், “தமிழர்களின் பொது வேட்பாளர் என்பது வடக்கு - கிழக்கு தமிழர்கள் மட்டுமன்றி மற்றைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களும் தமது எதிர்காலம் குறித்து ஒருமித்த குரலில் பேசக் கிடைத்த சிறந்த வாய்ப்பு இது” என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது:

“எமது நேயர்கள் தொடர்ந்து விடுத்த வேண்டுகோள்களை அடுத்து அவர்களது பங்களிப்புகளை ஒன்று திரட்டி அனுப்ப நாம் முன்வந்தோம். பங்களித்தோருக்கும் இம்முயற்சியில் அனுசரணை செய்த ஈழத்து தமிழர் கழகத்துக்கும் நாம் நன்றி சொல கிறோம்.

“தாயகம் வானொலி ஊடாக பொது வேட்பாளர் குறித்த விபரங்களை நேயர்களுக்கு வழங்கும் வகையில் எம்முடன் இணைந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன், முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் என்.சிறீகாந்தா, பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், சமூக செயற்பாட்டாளர்கள் அ.யதீந்திரா, பொ. ஐங்கரநேசன் மற்றும் செல்வின் இரேனியஸ் ஆகியோருக்கும் எமது நன்றிகள்” என்று குறிப்பிட்டார்.

## ஐ.தே.க.வின் தேர்தல் அலுவலகம் அக்கரைப்பற்றில் திறந்துவைப்பு

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் காரியாலயத்தினை திறந்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று அரசடிப் பகுதியில் இடம்பெற்றது. பிரதேச அமைப்பாளர் எம்.ஏ.எஸ்.சலீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஐக்கிய தேசிய கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான பிரதம அமைப்பாளர் யூ.கே.ஆதம்வெள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு காரியாலயத்தினை திறந்து வைத்தார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கட்சிகள் மூலம் இதுவரை ஐந்து தேர்தல் காரியாலயங்கள் நிறுவப் பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் இரு தேர்தல் காரியாலயங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் காரியாலயங்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இரு காரியால யங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் தேர்தல் காரியாலயமொன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆன்மீக பிரசாரகர் அடிப்படை தகைமை சான்றிதழ் வழங்கல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சைவ ஆன்மீகப் பிரசாரகர் அடிப்படைக் கற்கைநெறியை மேற்கொண்டு தகைமை பெற்றோருக்கான சான்றிதழ்வழங்கும்நிகழ்வு திங்கட் கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணப்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா தகைமை பெற்றோருக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இக்கற்கை நெறி ஆறு மாத காலப் பகுதியை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை தொடக்கம் மாலை வரை முழுநாள் கற்கையாக மதிய உணவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

திணைக்கள பணிப்பாளரின் மேற்பார்வையில் ச.லலீசன், கு. பாலசண்முகன், ரமணராஜா,கலாநிதி தி. செல்வமனோகரன், கலாநிதி ஜெயந்திரன், பிரம்மஸ்ரீ தி. மயூரகிரி சிவாச்சாரியார்




ஆகியோர் கற்கை நெறி வளவாளர்களாகச் செயற்பட்டனர். இருபத்தைவருடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறியின் இறுதித் தேர்வின் அடிப்படையில் பதினொரு பேர் சித்தியெய்தித் தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். இவர்கள் பாடசாலை ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்தியெய்தியோர் விபரம் வருமாறு

மதிலோஜினி லோகீசன், சு. தாரங்கன், தமிழ்ச்செல்வி மதியழகன், நித்தியானந்தம் பிரபாகர், சந்திரகுமார் மதுராஜினி, ஏ. சிவகுமார், சு. உதயகுமாரி, செல்லத்தம்பி சுரேந்திரா, சிவானந்தராஜா அபிஷனா, ஜே. நிருஷிகா, க. குமாரிமஞ்சுளா.

சான்றிதழ்வழங்கும்நிகழ்வில்கற்கை நெறி வளவாளர்களுடன் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், சைவப்புலவர் கந்த சத்தியதாசன், ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் எஸ் ஸ்ரீதயாளன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# படையினரைக் காட்டிக்கொடுக்கும் ஏற்பாடு எதுவும் நல்லிணக்க சட்ட மூலத்தில் இல்லை

## வெளியகத் தலையீடுகளைத் தடுப்பது மட்டுமே இதன் நோக்கம் என்கிறார் அமைச்சர் அலி சப்ரி



“உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூல வரைவில் எவ்விடத்திலும் இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்கும் அளவுக்கு எங்களின் மூளை பழுதடையவில்லை” என்று தெரிவித்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, “நாட்டின் உள்ளக விவகாரங்களில் வெளியக தலையீடுகளை தடுப்பதற்காகவே இந்த ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூல வரைபு குறித்து நாடாளுமன்றம் நேற்று கூடிய போது, விமல் வீரவன்ச உட்பட சில உறுப்பினர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டது. அவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உரையாற்றினார்.

“ஜனாதிபதித் தேர்தலின் போது இனவாதத்தை தூண்டிவிட ஒரு தரப்பினர் இந்த சட்டமூலத்தை பயன்படுத்தப் பார்க்கின்றனர்” என்றும் குற்றஞ்சாட்டிய அமைச்சர் அலி சப்ரி, “வெளியக மட்டத்தில் சாட்சியம் திரட்டும் பொறிமுறை முன்னெடுக்கப்படுகிறது. அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் இதற்கு முழுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம்” என்றும், “உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூல வரைவில் எவ்விடத்திலும் இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்கும் அளவுக்கு எங்களின் மூளை பழுதடையவில்லை” என்றும் தெரிவித்தார்.

“உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இலங்கையில் மாத்திரம் உருவாக்கப்படவில்லை. நேபாளம், இந்த ஆணைக்குழு முறைமை பின்பற்றப்பட்டுள்ளது. நாட்டின் உள்ளக விவகாரங்களில் வெளியக தலையீடுகளை தடுப்பதற்காகவே இந்த ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது. இந்த பொறிமுறையை உருவாக்காவிடின் தான் நியாயத்தை பெற்றுக்கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் வெளியக பொறிமுறையை நாடுவார்கள்.

தண்டனை வழங்கும் அதிகாரம் எவருக்கும் வழங்கப்படவில்லை. விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான விதப்புரைகள் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

“உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கத்தை தமிழ் அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. சர்வதேச அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கு காண்பிக்கப்படும் பொய் என்று தமிழ் கட்சிகள்

இதனை குறிப்பிடுகிறார்கள். விமல் வீரவன்ச போன்றவர்கள் இராணுவத்தினரை தண்டிக்க கொண்டுவரப்பட்டுள்ளது என குறிப்பிடுகிறார்கள். இராணுவத்தினரை தண்டிப்பதாக இருந்தால் தமிழ் கட்சிகள் எமக்கு ஆதரவளிப்பார்கள்தானே?

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எவரையும் தண்டிக்காது. அறிக்கை மாத்திரமே சமர்ப்பிக்கும். சட்டமா அதிபர் திணைக்களமே அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும். இந்த சட்ட மூலத்தை விமர்சிப்பவர்களுக்கு முதலில் சட்டமூலம் பற்றி தெளிவில்லை.

தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்குவது தவறா? 1983 ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்டவர்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஊடாக நிவாரணத்தை பெற்றுக்கொள்ளும் சூழலை ஏற்படுத்தவே

முயற்சிக்கிறோம். உண்மையை கண்டறிந்தால் மாத்திரமே நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க முடியும். காணாமல் போனார் பட்டியலில்

6042 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் உறவுகளுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அனைத்தையும் இனவாத கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டாம். பிரச்சினைகள் இல்லாவிட்டால் புதிய பிரச்சினைகளை இவர்கள் தோற்றுவிக்கிறார்கள்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் இனவாதம் மற்றும் மதவாதம் இல்லாமல் பொருளாதார பிரச்சினை பற்றி பேசப்படுகிறது. ஒருசிலர் இதனை விரும்பவில்லை. இனவாதத்தை தோற்றுவிக்கவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தை பயன்படுத்தப்பார்க்கின்றார்கள்.”

இவ்வாறு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# மலேசியாவில் கிராஅத் போட்டிகள் இலங்கையிலிருந்து இருவர் தெரிவு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மலேசியாவில்நடைபெறும்64ஆவதுசர்வதேச கிராஅத் போட்டிக்காக இலங்கையிலிருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த போட்டியில் ஆண்கள் பிரிவில் கண்டி, தஸ்கர அல் – ஹக்கானிய்யா அரபுக் கல்லூரியிலிருந்து அஷ்ஷெய்க் காரி சுஹைல் முஹ்ஸின் (ஹக்கானி) மற்றும் பெண்கள் பிரிவில் வெல்லம்பிட்டிய மத்ரஸதுல் ஹூதாவிலிருந்து பாத்திமா ஹசீபா நுஹ்மான் ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதல் சுற்று, இணைய வழியாக நடைபெற்றது. இதில் 70 இற்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொண்டனர். அதிலிருந்து 25 நாடுகள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகின.

மேலும் இறுதி சுற்றானது மலேசியாவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையிலிருந்து இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள குறித்த இரு போட்டியாளர்களையும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் அவர்கள் திணைக்களத்துக்கு அழைத்து, அவர்களுக்கான ஆவணங்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்து வாழ்த்துக்கள் கூறி அனுப்பி வைத்தார்.

மேற்படி நிகழ்வில், திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என். நிலூபர் மற்றும் திணைக்களத்தின் போட்டிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் எம். எம்.எம்.முப்தி முர்சி ஆகியோர் கலந்து கொண்டனர். போட்டியாளர்கள் இலங்கையில் இருந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை மலேசியாவுக்குச் செல்லவுள்ளனர்.

## மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய நூல் வெளியீடு

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் உரையும் விளக்கமும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் சிறீலசிறீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையையும் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரையையும் வழங்குவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் பிரதம அதிதியாகவும் நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாசன், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறைமற்றும்இளைஞர்விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ள வுள்ளனர்.

வலம்புரி நாளிதழ் ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியீட்டு ரையையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வை. விஜயபாஸ்கரன் அறிமுக உரையையும் ஆற்றுவர்.









## கடவுச்சீட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குற்றஞ்சாட்டினார். சாதாரண கடவுச்சீட்டுகளை அச்சிடும் நிறுவனங்களுக்கு அதனை அச்சிடுவதற்கான போதுமான தொகைகள் வழங்கப்படவில்லை. கடவுச்சீட்டுக்களுக்கான கேள்விகள் என்ன என்பது குறித்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு தெரியாதா என்கின்ற ஒரு சிக்கலும் ஏற்படுகின்றது. இதனால், மாதத்துக்கு 1.1 பில்லியன் ஷரூபா நட்டம் ஏற்படுகின்றது. எனவே இந்த சிக்கலுக்கு விரைவான தீர்வு பெற வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவை இந்த நு-கடவுச்சீட்டு வேலைத்திட்டத்தில் எந்த ஒரு கொள்முதல் நடைமுறையும் இல்லாமல் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கி இருக்கின்றது. அதனால் இந்த பிரச்சினை தற்பொழுது உக்கிரமடைந்திருக்கிறது. இவ்வாறான அவசர நிலைமைகளை எதிர்கொள்வதற்கு மாற்று திட்டம் இருக்க வேண்டும். அரசாங்கத்திடம் அவ்வாறான திட்டங்கள் எதுவும் இல்லை. இந்த வரிசை ஏற்பட்டமைக்கு ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவையே பொறுப்புக் கூற வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணியின் தலைவர், செயலாளர் மற்றும் ஏனைய பதவிகள் குறித்த அறிவிப்புகளும் இதன்போது வெளியிடப்பட உள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி உட்பட பல்வேறு கட்சிகள் இந்த கூட்டணி உடன்படிக்கையில் கைச்சாத்திட உள்ளன. ரணிலை ஆதரிக்கும் எம். பிகள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தக் கூட்டணியின் கீழ் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் இரண்டு வாரங்களில் கடுமையான பிரச்சாரங்களை மேற்கொண்டு ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துமாறு இந்தக் கூட்டணியின் கட்சிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த காலங்களில் ஏற்பட்ட ஏமாற்றங்களின் விளைவாகவும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாறுவதற்கு தயார் இல்லை என்பதை காட்டுவதற்கான ஒரு களமாக இத்தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலைப்பாடு மக்கள் மத்தியில் இருக்கிறது. இதன் காரணமாக இத்தேர்தலில் என்னை களம் இறங்கியுள்ளனர்.

இணைந்த வட கிழக்கில் இருக்கின்ற மக்கள் அதி கூடிய வாக்குகளை அளிக்க வேண்டும். கடந்த காலங்களில் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதனை காட்டுகின்ற போது நாங்கள் போராடிய ஒரு இனம். தொடர்ச்சியாக சுதந்திரம் அற்று இருக்கின்றோம் என்ற விடையத்தின் ஊடாக ஒரு தீர்வு கிடைக்க வேண்டும்.

ஒரு அடையாளத்திற்காகவே நான் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றேன். நீங்கள் சங்கு சின்னத்துக்கு வழங்கும் வாக்கு உங்களுக்கானது. தமிழன் தமிழனாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். சிதறிக்கிடக்கும் தமிழ் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் ஒரு நோக்காக இதனை அனைவரும் பார்க்க வேண்டும். யாரோ ஒருவர் ஜனாதிபதியாக வெற்றி பெறுவார். யாராகவும் இருக்கலாம். இந்த நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண்டும். எங்களை தலைவர்கள் ஏமாற்ற இருந்தாலும் மக்களாகிய நாங்கள் தயார் இல்லை என்பதை காட்ட வேண்டும்" என் தெரிவித்தார்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net · Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net · Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net · Travel & Local
JRide - Beyond the Road
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!